# காஞ்சிபுரம் வடக்கு, தெற்கு மாவட்ட இளைஞர் அணி சமூக வலைதள துணை அமைப்பாளர் பொறுப்புக்கு நேர்காணல்!

# துணை முதல்வர் - கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஆய்வு!









சென்னை, ஜூன் 15-

தி.மு.கழக இளைஞர் அணி நிர்வாகிகளுக்கு சமூக வலைதளப் பயிற்சியளிக்கவும், சமூக வலைதளம் சார்ந்த அவர்களின் பணிகளை ஒருங்கிணைக்கவும், தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலில், கழக மாவட்டத்துக்கு ஒருவர் என அனைத்து மாவட்டங்களிலும் இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

இந்தப் பொறுப்புக்கு, தமிழ்நாடு முழுவதும் இருந்து 1400க்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் பெறப்பட்டன. இந்த நிலையில், கழக இளைஞர் அணிச் செயலாளர், துணை முதலமைச்சர் அவர்கள், இப்பொறுப்புக்கு விண்ணப்பித்தவர்கள் இதுவரை ஆற்றிய பணிகள். கொண்டு வந்திருந்த 'மினிட்' புத்தகங்கள் அவர்களின் சமூக வலைதளப் பக்கங்கள் ஆகியவற்றை ஆய்வு செய்தார்.

மாநில துணைச் செயலாளர் பிரபு கஜேந்திரன் முன்னிலையில், காஞ்சிபுரம் வடக்கு மற்றும் தெற்கு மாவட்டங்களுக்கான சமூக வலைதள துணை அமைப்பாளர் பொறுப்புகளுக்கு விண்ணப்பித்திருந்தவர்களை நேற்று முன்தினம் நேர்காணல் செய்தார்.

## மாற்றுத்திறனாளிகளுக்கான புதிய உபகரணங்கள் கண்காட்சி!

சென்னை, ஜூன் 15-

மாற்றுத்திறனாளிகளுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் உதவி உபகரணங்களுடன் நவீன தொழில்நுட்ப வசதிகள் (Advanced Technology) கொண்ட புதிய உதவி உபகரணங்களை காட்சிப்படுத்தி அவ்வுபகரணங்களின் செயல்பாடு குறித்து மறுவாழ்வு மருத்துவர்கள், மறுவாழ்வு பணியாளர்கள், மாற்றுத்திறனாளி பயனாளிகள் மற்றும் துறை வல்லுநர்கள் மூலம் ஆய்வு செய்யவும் தகுதியான உபகரணங்களை தேர்வு செய்ய ஏதுவாகவும் புதிய உபகரணங்களுக்கான கண்காட்சி (TECH4ALL) 12.06.2025 மற்றும் 13.06.2025 ஆகிய தினங்களில் சென்னை சேப்பாக்கத்தில் உள்ள கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்றது. இந்த கண்காட்சியில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் அரசு செயலாளர் திருமதி எஸ்.மதுமதி, மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர் திருமதி எம். லக்ஷ்மி, இணை இயக்குநர் திருமதி ஃபெர்மி வித்யா மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இக்கண்காட்சியில் 48 உதவி உபகரணங்கள் தயாரிக்கும் நிறுவனங்கள் மூலம் காட்சிப்படுத்தப்பட்ட உதவி உபகரணங்களை 86 துறை சார்ந்த தொழில்நுட்ப வல்லுநர்களும் 836 மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்ட பொது மக்களும் பார்வையிட்டு மதிப்பீடு செய்தனர். இக்கண்காட்சியில் சிறப்பு பள்ளிகள் மற்றும் கல்லூரிகளை சேர்ந்த சுமார் 300 மாணவ மாணவியரும் பார்வையிட்டு உதவி உபகரணங்களின் பயன்பாடுகளை கண்டறிந்தனர்.

இக்கண்காட்சியின் மூலம் துறை அலுவலர்கள், துறை சார்ந்த வல்லுநர்கள் மற்றும் பொது மக்கள் மாற்றுத்திறனாளிகளின் பயன்பாட்டிற்கென அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய உதவி உபகரணங்களை பார்வையிடவும், பயன்பாடு களை தெரிந்துகொள்ளவும், அதனை மதிப்பீடு செய்யவும் உதவிகரமாக விளங்கியது. இக் கண்காட்சியின் மூலம் துறை வல்லுநர்கள், மாற்றுத்திறனாளிகள், பொது மக்கள் மற்றும் மாணவ மாணவிகள் என சுமார் 1500 நபர்கள் கலந்து கொண்டு பயனடைந்துள்ளனர்.




பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி – தஞ்சை மாவட்டம் – தம்பிக்கோட்டை வடகாடு பகுதியில் சேவையாற்றும் அரசு மேல்நிலைப் பள்ளியில் திடீர் ஆய்வு மேற்கொண்டார். அங்கு கட்டப்பட்டு வரும் புதிய வகுப்பறைக் கட்டடங்களைப் பார்வையிட்டு, மாணவர்களின் கற்றல் அடைவுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். பள்ளி வளர்ச்சிக்கான கோரிக்கைகளைக் கேட்டறிந்து விரைவில் நிறைவேற்றப்படும் என உறுதியளித்தார். பிரதானக் கோரிக்கையான ஆய்வகம் தொடர்பாக விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் உறுதியளித்தார். இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் முரசொலி உடனிருந்தார்.

## மக்களின் கோரிக்கையும், அமைச்சர் சா.சி.சிவசங்கர் தந்த உடனடித் தீர்வும்!

பெரம்பலூர், ஜூன் 12-

பெரம்பலூர் மாவட்டம் ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் பல்வேறு பகுதிகளில் வளர்ச்சி திட்டப் பணிகளை தொடங்கி வைப்பதற்காக போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் காலை 9 மணிக்கு தொடங்கி மதியம் 3 மணி வரை பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார்.

இதில் கீழமாத்தூர் ஊராட்சிக்கு செல்லும் போது அந்த ஊராட்சிக் குட்பட்ட சடைக்கண் பட்டி கிராமத்திற்கு காவிரி குடிநீர் வரவில்லை என அமைச்சரிடம் பொதுமக்கள் கோரிக்கை வைத்தனர்.

பொதுமக்களிடம் உங்களது கோரிக்கை இன்றே நிறைவேற்றப்படும் என உறுதி அளித்த அமைச்சர் அவர்கள், உடனடியாக அதற்கான பணிகளை செய்து முடிக்குமாறு ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இதனை அடுத்து போர்க் கால அடிப்படையில் இரண்டே மணி நேரத்தில் சடைக்கண்பட்டி கிராம பொதுமக்களின் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு அப்பகுதி மக்களுக்கு குடிநீர் இணைப்பு வழங்கப் பட்டது.

கோரிக்கை வைக்கப் பட்ட உடனேயே தங்களுக்கு குடிநீர் கிடைக்கப் பெற்ற மகிழ்ச்சியில் அப்பகுதி மக்கள் அமைச்சருக்கு மகிழ்ச்சிபொங்க தங்களது நன்றிகளை தெரிவித்துக் கொண்டனர்.




நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு அவர்கள் 12.06.2025 அன்று திருச்சிராப்பள்ளி கே.கே.நகர், மங்கம்மாள் சாலையில் நடைபெற்ற விழாவில் மாநகராட்சி பகுதி பயனாளிகளுக்கு வீட்டுமனை பட்டாக்களை வழங்கி உரையாற்றினார். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் மா.பிரதீப் குமார், மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, மாநகராட்சி மேயர் மு.அன்பழகன், மாநகராட்சி ஆணையர் வே.சரவணன், துணை ஆட்சியர் (பயிற்சி) செல்வி.தீபிசனு, மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.ர.ராஜலட்சுமி, வருவாய் கோட்டாட்சியர் அருள், வட்டாட்சியர் பிரகாஷ், மாவட்ட நகர் ஊரமைப்புக்குழு உறுப்பினர் க.வைரமணி, மண்டல தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், கவுன்சிலர் கவிதா செல்வம், மண்டல தலைவர் துர்கா தேவி, வட்டச் செயலாளர் கிராப்பட்டி செல்வம், பகுதி செயலாளர்கள் நாகராஜ் கமல் முஸ்தபா மோகன்தாஸ் அரசு அலுவலர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.